**மத்திய நுவரகம்பலாத பிரதேச சபை - 2021**

----------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று / தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்ான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினமாக கணக்கு வைக்கப்பட்ட ரூபா 3,819,928 மதிப்புள்ள 03 கட்டிடங்கள் மீளாய்வாண்டின போது சொத்துக்களாக கணக்கு வைக்கும் போது மூலதன மானியத்தின் கீழ் கணக்கிடப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியில் செலவு வைக்கப்பட்டன. | திரண்ட நிதியில் செலவு வைக்கப்பட்ட இந்த மதிப்பு, மூலதன மானியமாக சரியாகக் கணக்கிடப்பட்டது. | கணக்கு மீதிகளை சரியாகக் கண்டறிந்து கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடத்தில் நிதியங்கள் கிடைத்திருந்த போதிலும், ஆரம்பிக்கப்படாத LDSP செயற்திட்டத்தின் வீதி நிர்மாண நிதியம் ரூபா 3,743,300 மீளாய்வாண்டின் மூலதன மானியமாக 02 சந்தர்ப்பங்களில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | LDSP செயற்திட்டத்திற்காக கிடைத்த மானியங்கள் 04 பேரேட்டுப் பதிவுகள் மற்றும் 62 இன் ஊடாக இரு சந்தர்ப்பங்களில் கணக்கு வைக்கப்பட்டமை திருத்தப்பட்டது. | சரியாகக் கணக்கு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த வருடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மான்கடவெல கொக்கிச்சிய வீதிக்கு அச்சுக் கற்களை பதிக்கும் செயற்திட்டத்தின் செலவினமான ரூபா 283,489 தொகை 02 சந்தர்ப்பங்களில் மூலதன மானியங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | விரிவான வருமானத்தை இனங்கண்டு அதிகமான இனங்காணப்பட்ட அளவானது திருத்தப்பட்டது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கடந்த வருடத்தில் இனங்காணப்பட்ட சொத்துக்களின் அடிப்படையில் மீண்டெழாத செலவினங்களுக்காக அரசின் மாற்றல் அரசிறை ரூபா 1,364,913 ஆன போதிலும், மீளாய்வாண்டின் போது பேரேடு 04 மற்றும் 05 இன் கீழ் திருத்தப்பட்ட மொத்த பெறுமதியில் 10 சதவீதமாக கருதி ரூபா 1,652,944 ஆக விரிவான வருமானக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | விரிவான வருமானத்தை இனங்கண்டு அதிகமான இனங்காணப்பட்ட அளவானது திருத்தப்பட்டது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | வீதிகள், மதகுகள் மற்றும் ஒழுங்கைகள் நிர்மாணங்களின் மீளாய்வாண்டுக்குரிய பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 1,260,144 ஆன போதிலும், சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 808,875 ஆக ரூபா 451,269 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வு குறைவாக பதிவு செய்தல் திருத்தப்படல். | சரியான செலவினங்கள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | LDSP செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது வீதி நிர்மாணங்களுக்காக வழங்கிய முற்பணங்களான ரூபா 168,861 மூலதன மானியமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | மீண்டெழும் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகை மூலதனச் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமை திருத்தப்படல். | முற்பணங்களை வழங்குதல் பெற வேண்டிய மீதிகளாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தரப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 பெப்பரவரி 20 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் ஒபப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டு மாதாந்த வேதனமாக ரூபா 42,900 தொகையும் விடுமுறை தின கடமைகளுக்காக படிகளாக ரூபா 99,200 தொகையும் போக்குவரத்துக் கட்டணங்களாக ரூபா 48,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | தொழில் நுட்ப அலுவலர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் இருவருக்கு அனைத்து பணிகளையும் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டதால், இந்த அலுவலர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, வார நாட்களில் செய்ய முடியாத பணிகளுக்கு விடுமுறை நாட்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின்படி, ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஓய்வு பெற்ற அதிகாரிக்கு மாதாந்த ஊதியம் மட்டுமே வழங்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திமெசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 12,587,583 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 13,086,813 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீத வரி மற்றும் வரி** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,580,450 ஆன நிலுவை குப்பை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | குப்பை வரி செலுத்துவோரின் பட்டியல் தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. நிலுவைகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். | பதிவேடுகளை முறையான பராமரித்து உப விதிகளை விதித்தல் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

--------------

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 1,467,207 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வாடகையை பதிவழிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. | பதிவேடுகளை முறையான பராமரித்து உப விதிகளை விதித்தல் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக LDSP செயற்திட்டத்தின் கீழ் மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிகிகப்பட்ட 02 வீதிகளுக்காக ரூபா 7,140,209 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்களின் எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | பட்டியல்களை சான்றுபடுத்த முன்னர் செயற்திட்டங்களை பௌதீக ரீதியாக பரிசோதித்து பட்டியல்களை சான்றுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புர நெகும செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் பெப்ரவரி 12 ஆந் திகதியளவில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 2,505,266 தொகை அந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பாது சபையின் பெயரில் அரச வங்கியின் நடைமுறைக் கணக்கில் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த பணம் புரநெகும செயற்திட்டத்திற்குரிய பணம் என்பதால் அதற்கரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக புரநெகும வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. | குறுங்கால முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபைக்கு சொந்தமாக காணப்படும் 04 வாகனங்கள் 01-05 வரையான காலமாக செயலற்று காணப்பட்ட போதிலும், பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | துரிதமாக பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) சபைக்கு சொந்தமான எலயாபத்துவ வாரச்சந்தை மற்றும் புலத்குளம் வாரச்சந்தை ஆகியன விளைவற்றுக் காணப்படுவதுடன், இந்த காணியின் வேலிகளை அமைத்து பாதுகாப்பதற்காக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அந்த இடத்தினை பாதுகாப்பதற்கு கவனம் செலுத்துவதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | குறித்த சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு சொத்துக்களை குத்தகைக்கு வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) சபைக்கு சொந்தமான ரூபா 2,500,000 பெறுமதியான கலி பவுசர் மற்றும் டிரக்டர் வண்டி குப்பையை அகற்றுவதற்கான இடமொன்று இல்லாமையால் 2021 ஆம் ஆண்டு முழுவதும் விளைவற்றுக் காணப்பட்டது. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் இருந்து கழிவுகளை அகற்றுவதற்கான இடத்தை தயார் செய்வதற்கு தேவையான ஏற்பாடுகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். | கலி பவுசர் இயந்திரத்தை பயன்படுத்த தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். |
| (உ) ரூபா 90,690,000 பெறுமதியான 109 காணித் துண்டுகளுக்கான ஒப்படைப்பு சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணிகளை கையகப்படுத்துவதற்காக பிரதேச செயலகங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | நிலவும் சொத்துக்களை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக நிறைவு செய்யப்பட வேண்டிய 75 செயற்திட்டங்களில் 13 செயற்திட்டங்கள் மாத்திரம் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. | 75 செயற்திட்டங்களில் 13 செயற்திட்டங்கள் மாத்திரம் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், ஏனைய செயற்திட்டங்களுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை ஆண்டினுள் ஆரம்பித்து நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |